GCI

# ஸ்தல சபை

## முகவுரை

பாடத்திட்ட நோக்கம்:

- ஸ்தல சபை என்றால் என்ன என்பதைப் புரிந்து கொள்ள.
- சபையின் தலைமைத்துவத்தை ஆராய.
- பயனுள்ள சபையின் அடையளங்களைப் பகுத்துணர.

## பாட மேற்பார்வை

**I** முகவுரை

A. வரையறை

**II** சபை

A. எது சபையல்ல
B. வாஸ்தவமான சபை என்பது
C. சபை எப்படி இருக்க வேண்டும்
D. சபையின் முக்கியத்துவம்

**III** சபைத் தலைமைத்துவம்

A. தகுதிகள்
B. அடிப்படை ஊழியங்கள்

**IV** சபை மற்றும் உறுப்பினர்களின் பங்கு

A. சபையின் பங்கு
B. உறுப்பினர்களின் பங்கு

**V** பயனுள்ள சபையின் அடையளங்கள்

A. தேவபக்தியுள்ள தலைவர்கள்
B. சபையின் ஒழுக்கம்
C. வேதத்தில் சபை

GCI

# I முகவுரை

மத்தேயு 16:18,19; எபேசியர் 2:20-22

## A. வரையறை

1. கிரேக்க மொழியில் ‘எக்ளீசியா’ என்பதின் அர்த்தம் பிரித்தெடுக்கப் பட்டவர்கள் என்பதாகும்

   அவர்களுடைய வீடுகளிலிருந்தும் வேலைப் பகுதிகளிலிருந்தும் முக்கிய நோக்கத்துடன் பிரித்து எடுக்கப்பட்டவர்கள்.

   எபிரெயப் பிண்ணனி: தேவ மக்கள் தேவ சத்தம் கேட்க அல்லது தேவனுக்காகச் செயல்பட அழைக்கப்பட்டனர். ஒருமித்துக் கூடிவர அவர்களின் கூடாரங்களில் இருந்து அழைக்கப்பட்டனர்.
   யாத்திராகமம் 12:3,6

   - கல்தேயரின் பட்டணத்திலிருந்து புறப்பட்டுவர ஆபிரகாம் அழைக்கப்படல்
     ஆதியாகமம் 12:1; எபிரெயர் 11:8

   - எகிப்திலிருந்து இஸ்ரவேலர் அழைக்கப்படல்
     யாத்திராகமம் 12:3,6; அப்போஸ்தலர் 7:38

   - உலகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட சபைக்கு அழைப்பு
     2கொரிந்தியர் 6 : 17; வெளிப்படுத்தல் 18:4

2. கிறிஸ்துவால் சிந்தப்பட்ட இரத்தத்தினால் பாவ மன்னிப்பு பெற்றவர்களை உள்ளடக்கி உருவாக்கப்பட்டது தான் சபை.
   வெளிப்படுத்தல் 7:14

3. உலகலாவிய சபை

   என் சபையைக் கட்டுவேன், சபைகளை அல்ல. மத்தேயு 16:18

   இரட்சிப்பிற்காக இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கும் அனைத்து விசுவாசிகள்.

   சகல கோத்திரங்கள, பாஷைக்காரர்கள், மக்கள் மற்றும் நாடுகள்
   வெளிப்படுத்தல் 5:9

GCI

4. பல பகுதிகளில் செயல்படும் ஸ்தல சபைகள்

ஆனால் உலகாலவிய சபையின் ஒரு பகுதி. நடபடிகள் புத்தகத்தில் காணப்படும் 'சபைகள்'

உதாரணம் பவுல் - கலாத்தி, எபேசு மற்றும் பிலிப்பு சபைகள் மத்தேயு 18:15-20

பூகோள ரீதியாக அமைக்கப்பட்டுள்ளது, ஆனாலும் ஒரே ஆவியில். புதிய ஏற்பாட்டு அனுபவப்படி சபையை மாற்றுவது என்பது புதிய பட்டணத்திற்கு மாறுவது என்பதாகும்!

5. வீட்டு சபைகள் - இரண்டு அல்லது அதற்கு மேல் இயேசுவின் நாமத்தில் ஒன்று கூடும் இடம். மத்தேயு 18: 20

- ஆதித்திருச்சபை : அனுதினமும் அப்போஸ்தலர் 2 : 2, 46
- சுவிசேஷம் அறிவிக்கத் தடையுள்ள நாடுகள் : அரசியல் சூழ்நிலையால் ஏற்படும் தேவை
- நகர்மயப் பகுதிகள் - அநேக சபைகளில் செல் குழுக்கள் தலைவர்களால் நடத்தப்படுகின்றன - நெருக்கமான ஐக்கியம், அதிகக் கரிசனை, அதிகத் தலைவர்கள் உருவாக்கப்பட வாய்ப்பு, கடினமான சூழல்களிலும் சபை தொடரும் திறன்.

6. அஸ்திபாரம்

ஞானமாய்க கட்டுபவர்கள் மற்றும் புத்தியீனமாய்க் கட்டுபவர்கள் மத்தேயு 18: 20

மோசே கன்மலையை அடித்ததும் தண்ணீர் புறப்பட்டு வந்தது. யாத்திராகமம் 17:16, எண்ணாகமம் 20:7-12 1 கொரிந்தியர் 10:3

கன்மலை கிறிஸ்துவே, அவர் ஒரு முறை மட்டுமே அடிக்கப்பட வேண்டும்! சங் 18 : 31

a) மத்தேயு 16: 18 - 19

பேதுருவின் அறிக்கையான இயேசுவே கர்த்தர் என்னும் அஸ்திபாரத்தின் மேல் சபை கட்டப்பட்டிருக்கிறது. பேதுரு என்றால் சிறிய கல் என்றும் கன்மலை என்றால் பெரிய பாறை என்றும் பொருள்படும்.

GCI

b) எபேசியர் 2:20

**இயேசுகிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார். அப்போஸ்தலர் தீர்கதரிசிகள் என்பவர்கள் அஸ்திபாரம் அதற்கு முன்பாக மூலைக்கல் முதலில் நிறுவப்படல் வேண்டும்.**

கட்டுகிறவர்கள் அவைகளின் அமைப்பை ஒத்தே சுவர்களை எழுப்புகிறார்கள். நிலைத்தன்மையை அதிகரிக்கிறார்கள். அதை நிறுவ அதிக நேரம் எடுத்துக் கொள்கிறார்கள்.

c) அப்போஸ்தலர் 2 : 42

அப்போஸ்தல உபதேசம் என்னும் அஸ்திபாரத்தின் மீது மற்ற ஊழியங்கள் கட்டியெழுப்பப்படுகின்றன.

## II சபை

### A. எது சபையல்ல

1. கட்டடம் அல்ல

அப்போஸ்தலர் 2 : 47: **கர்த்தர் அநுதினமும் சபையில் சேர்த்துக் கொண்டு வந்தார்.**

**அப்போஸ்தலர் 5 : 11: சபையாரெல்லாருக்கும் மிகுந்த பயமுண்டாயிற்று.**

அப்போஸ்தலர் 8 : 1-3: உபத்திரவம், சபையை அழிக்க சவுலின் முயற்சி.

அப்போஸ்தலர் 18 : 22: சபைக்கு பவுலின் வாழ்த்து

கட்டடமாய் இருக்க முடியாது.

நான் என் சபையைக் கட்டுவேன் என்று இயேசு சொன்ன போது கட்டிடங்களைக் கட்டியெழுப்புவதைக் குறிக்கவில்லை. பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்ளுவதில்லை - நிச்சயமாகக் கட்டிடமாக இருக்க முடியாது. சில தலைவர்கள் மக்களைக் கட்டி எழுப்புவதைவிட கட்டிடங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.

2. ஸ்தாபனம் அல்ல

GCI

வேதாகமம் பாப்டிஸ்ட் சபை, ஏஜி சபை போன்றவைகளைக் குறித்துப் பேசவில்லை. கீழ்கண்டவைகளின் அடிப்படையில் ஸ்தாபனங்கள் அமைக்கப்படுகின்றன:

- உபதேச முக்கியத்துவம் அலலது குறிப்பிட்ட வேத சத்தியத்தின் மீது முக்கியத்துவம். உதாரணம் - பரிசுத்த சபை, பெந்தகோஸ்தே சபை, கிருபையின் சபை மற்றும் பல.

- சில முக்கிய அனுபவம். உதாரணம்: பாப்டிஸ்ட் சபை - திரு முழுக்கு, பெந்தகோஸ்தே சபை - ஆவியில் ஸ்நானம், பரிசுத்தம் - பெந்தகோஸ்தே பரிசுத்தம் மற்றும் பல.

- எழுப்புதல் வர தேவன் உபயோகப்படுத்தும் பாத்திரம், ஓரல் ராபார்ட்ஸ் அஸோஉஷியேஷன்.

ஸ்தாபனங்கள் எழுப்புதலின் வாயிலாகவோ, சில சத்தியங்களின் மீட்பு போன்ற நோக்கங்களால் ஏற்படுத்தப்படுகின்றன. இப்படி அமைக்கப்பட்ட ஒரு ஸ்தாபனத்தில் இருப்பவர்கள் குறிப்பிட்ட சத்தியங்களின் மைத்தில் நிலைநிறுத்திக் கொண்டு, வேறொரு ஸ்தாபனத்தில் உள்ளவர்களையோ அல்லது புதிய ஸ்தாபனம் அமைவதையோ அவர்களால் ஏற்றுக்கொள்ள முடிவதில்லை.

B. வாஸ்தவமான சபை என்பது

1. தேவனுடைய ஆலயம் - எபேசியர் 2: 19-22, 1 கொரிந்தியர் 3:16-17

தமது பரிசுத்த ஆவியில் மக்கள் ஒருமித்துக் கூடும் சூழலை உருவாக்க விரும்புகிறார். ஆவிக்குரிய வீட்டைச் சுற்றிலும் கட்டபட்டுள்ள ஜீவனுள்ள கற்களாகையால, இயேசு கிறிஸ்துவின் வழியாகத் தேவனுக்குப் பிரியமான பலிகளைச் செலுத்த முடிகிறது. 1 பேதுரு 2:4,5

2. தேவனுடைய குடும்பம்

**பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாய் இருக்கிறோம்.** எபேசியர் 2: 19

தேவனுடைய பிள்ளைகளாகும் அதிகாரம். யோவான் 1: 12, 13

நாம் ஐக்கியப்படுவது ஒரு கிளப் அல்ல, மாறாக ஒரு குடும்பம். ஒரு வாழ்க்கை முறை.

- நாம் அந்தக் குடும்பத்தில் பிறக்க வேண்டும்.

GCI

- நமக்கு ஒரே பிதாவானவர் இருக்கிறார்.
- நமக்கு அநேக சகோதர சகோதரிகள் இருக்கிறார்கள்.
- குடும்பத்தின் பிள்ளைகளாக நமது பொறுப்புகளை ஏற்றுக் கொள்கிறோம்.
- குடும்பத்தின் உறுப்பினர்கள மீது பரிவும் அன்பும் உடையவர்களாய் இருக்கிறோம்.
- நமது பரம தந்தையின் சிட்சைகளை ஏற்றுக் கொள்கிறோம்.
- நாம் அநேகம் பிள்ளைகளை உருவாக்க வேண்டும் - சுவிஷேம்.

3. கிறிஸ்துவின் சரீரம் - 1 கொரிந்தியர் 12: 27

கிறிஸ்து தலையாய் இருக்கிறார். எபேசியர் 1: 22-23

அனைத்துக் கிறிஸ்தவர்களும் கிறிஸ்துவின் சரீர உறுப்பினர்களாவர். ஒவ்வொருவரும் முக்கியமானவர்கள். 1 கொரிந்தியர் 12: 18- 20

கண், காது, ... போன்ற உறுப்புக்கள் இல்லாமல் சரீரம் செயல்பட முடியாது. ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவமும் பாடுபடும். வ.26

**சரீரம் முழுவதும், அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க் கூட்டி இணைக்கப்பட்டு, சரீரவளர்ச்சியை உண்டாக்குகிறது.** வ.25 பாகுபாடுகள் இல்லை, ஒற்றுமை உண்டு. எபேசியர் 4: 16

4. கிறிஸ்துவின் மணவாட்டி எபேசியர் 5: 25-32

கிறிஸ்து மற்றும் அவரது சபையின் ஏக சிந்தை தனிப்பட்ட மற்றும் ஒருவருக்கொருவர் உடனான அர்ப்பணிப்பிலும் வெளிப்பட வேண்டும்.

- கிறிஸ்துவால் அன்பு கூறப்படல் வ.25
- கிறிஸ்து சபைக்காகத் தம்மையே கொடுத்தார். வ. 25
- சபையைச் சுத்திகரித்தார். வ. 26
- அவர்கள் ஐக்கியப்படுவர். வ. 31, 32
- ஆட்டுக்குட்டியானவரின் விவாகம் வெளிப்படுத்தல் 19: 7- 9

5. ஒரு மந்தை யோவான் 10: 11-14, 27-28.

GCI

a) இயேசு என்னும் நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுத்தார். வ . 11

b) ஓநாய் ஆடுகளைப் பிடித்துச் சிதறடிக்கிறது = சாத்தான் வ . 12

c) மேய்ப்பன் தன் ஆடுகளையும் அவைகள் மேய்ப்பனையும் அறிந்து வைத்துள்ளனர். வ . 14

d) அவரது ஆடுகள் அவருடைய சத்தத்திற்குச் செவிகொடுத்து அவருக்குப் பின் செல்லுகின்றன. வ . 27

e) மேய்ப்பனைப் போல தன் ஆடுகளை மேய்த்து, கறவலாடுகளைத் தன் தோலில் சுமந்து கொண்டு செல்வார். ஏசாயா 40 : 11

f) மேய்ப்பனின் பணிகள் **சங்கீதம்** 23

C. சபை எப்படி இருக்க வேண்டும்

1. ஜெயமுள்ளதாக – மத்தேயு 16: 15 – 20

a) பரலோக இராஜ்ஜியத்தின் திறவுகோலகளைப் பெற்றிருக்கும் சபை. திறவுகோல்கள் கதவுகளைத் திறக்கவும் அடைக்கவும் பயன்படுகின்றன. அவை மக்களை உள்ளே வரவும் வெளியே நிற்கவும் செய்கிறது. அவை திறக்கவோ அடைக்கவோ கூடிய திறன் உடையது. வ . 19

b) கட்டுகிற ஊழியம். எதிர்ப்பவைகளைக் கட்டுதல் - மக்களை அல்ல, ஆனால் துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் அசுத்த ஆவிகளையுமே கட்ட.

c) பெலவானை முந்திக் கட்டி அவனது வீட்டிலுள்ள உடமைகளைக் கொள்ளையிட வேண்டும். மத்தேயு 12: 29

d) சாத்தான் 1000 ஆண்டுகள் இறுதியாகக் கட்டப்படுவான். வெளி 20: 29. தேவ வசனம் ஒரு போதும் கட்டப் படுவதில்லை. 2 தீமோத்தேயு 12: 29

e) கட்டவிழ்க்கும் ஊழியம். சாத்தான் தன் கைதிகளைக் கட்டி வைக்கிறான். சபையோ அந்தக் கட்டுகளை அவிழ்த்து கட்டியவனைக் கட்டிப்போடும் படியாக அழைக்கப் பட்டிருக்கிறது.

f) லாசருவின் மரணத்துணிக் கட்டுகள் அவிழ்க்கப்பட வேண்டியதாயிருந்தது. யோவான் 11: 44

GCI

ப) “இதோ, சாத்தான் பதினெட்டு வருஷமாய்க் கட்டியிருந்த ஆபிரகாமின் குமாரத்தியாகிய இவளை இந்தக்கட்டிலிருந்து அவிழ்த்துவிடவேண்டியதில்லையா” லூக்கா 13 : 16

h) பூமியில் இருக்கிற சபை பரலோகத்துடன் இணைக்கப் பட்டிருக்கிறது. பூமியில் கட்டப்படுபவைகள் எவைகளோ அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும். பூமியில் கட்டவிழ்க்கப்படுபவைகள் எவைகளோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும். சபையானது அதன் தலையாகிய கிறிஸ்துவின் மனதைப் பெற்றிருப்பது அவசியம்.

2. ஐக்கியமுள்ளதாக – யோவான் 17: 20- 23

தேவன் தம்மைப் பூமிக்கு அனுப்பினார் என்று உலகம் விசுவாசிக்கக் கூடிய சான்றாக நாம் அனைவரும் ஒன்றாய இருக்க வேண்டும் என்பது இயேசுவின் ஜெபமாய் இருந்தது.

a) பிரிவினைகள் வருமென்பதை முன்னறிந்திருந்தார். வ.21

b) நாம் ஒன்றாயிருக்க வேண்டுமென்பதற்காகத் தமது மகிமையை நமக்குக் கொடுத்திருக்கிறார். வ.22

c) தேவன் தம்மைப் பூமிக்கு அனுப்பினார் என்று உலகம் விசுவாசிக்கும் படியாக, நாம் ஐக்கியத்தில் பூரணப்பட்டிருக்க வேண்டும். வ.23

d) தேவ நாமத்தில் ஐக்கியம் – ஸ்தாபனத்தில் அல்ல. இது ஒரு குடும்ப நாமம், தேவ குடும்ப நாமம். வ . 11,12

e) சத்தியமாகிய தேவனுடைய வார்த்தையில் ஒருமைப்பாடு. உபதேச ரீதியாகப் பிரிந்து நிற்பதல்ல. வ. 14, 17, 20

f) தேவ மகிமையில் ஒருமைப்பாடு. மனித மகிமையிலோ, ஸ்தாபன அல்லது குறிப்பிட்ட அமைப்பின் மகிமையிலோ அல்ல. வ.22,24

g) தேவ அன்பில் ஒருமைப்பாடு. தேவன் அன்பாகவே இருக்கிறார். அன்பு கொடுக்கிறதாய் இருக்கிறது. வ.26, யோவான் 3: 16

ஆதித் திருச்சபை

அப்போஸ்தலர் 1 : 14 – ஒருமனப்பட்டு ஜெபத்தில் தொடர்ந்து தரித்திருந்தார்கள்.

GCI

அப்போஸ்தலர் 2 : 46 – ஒருமனப்பட்டு தேவாலயத்தில் தரித்திருந்தார்கள்.

அப்போஸ்தலர் 4 : 32 – ஒரே இருதயமும் ஒரே மனமும்.

அப்போஸ்தலர் 5 : 12 – எல்லாரும் ஒருமனப்பட்டு....

அப்போஸ்தலர் 8 : 6 – பிலிப்புவால் சொல்லப்பட்டவைகளை ஒருமனப்பட்டுக் கவனித்தார்கள்.

**சங்கீதம்** 133 – சகோதரர்கள் ஒருமனப்பட்டு கூடிவரும் போது, அவ்விடத்தில் ஆசீர்வாதத்தைக் கட்டளையிடுகிறார்.

இவைகளை இன்றைய சபைகளில் காண்கிறோமா?

3. மகிமையுள்ளதாக – எபேசியர் 5: 23-32

சபை கிறிஸ்துவின் மணவாட்டி எனப் பவுலுக்கு வெளிப்பாடு கொடுக்கப் பட்டதன் வாயிலாக சபையைக் குறித்த தேவ நோக்கத்தை தேவன் காண்பிக்கிறார்.

a) பரிசுத்தமாக்கப்பட்டது - சுத்தமும் தேவனுக்காகப் பிரிக்கப்பட்டதுமான சபை வ. 26

b) சுத்திகரிப்பு - வசனமென்னும் தண்ணீரால் கழுவினார். வ. 26

c) மகிமைப்படுத்தப்படுதல் - மகிமையால் உடுத்தப்பட்டதும் கிறிஸ்துவிற்குப் புகழ்ச்சியைக் கொண்டுவருகிறதுமான சபை. வ. 27

d) கறை திறையற்றது - பழைய ஏற்பாட்டு பலிகளைப் போலவே வ . 27

e) பரிசுத்தமும் பிழையற்றதுமான சபை - பாவத்திலிருந்து பிரித்து எடுக்கப்பட்ட அனுபவம். வ. 27

சபையானது கிறிஸ்துவைப் போலவே இருக்க வேண்டியது, காரணம் அவர் சபையோடு இணைக்கப்பட வேண்டியவர். மேலும் ஆட்டுக்குட்டியானவரின் திருமணத்தின் போது சமமற்ற நுகத்தில் பிணைக்கப்படாதிருக்கவே இந்த எதிர்பார்ப்பு சபையின் மீது வைக்கப்படுகிறது.

D. சபையின் முக்கியத்துவம்

GCI

1. கிறிஸ்து தம்மை வெளிப்படுத்தப் பயன்படுத்தும் மார்க்கம் - எபேசியர் 3 : 10

"உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின்மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக"

கிறிஸ்து தம்மை முழுவதுமாக சபைக்காக அர்ப்பணித்தார். " பிதா என்னை அனுப்பியது போல நான் உங்களை அனுப்புகிறேன். யோவான் 20 : 21

2. பிதாவைக் குமாரன் மகிமைப்படுத்தும் வழி - எபேசியர் 3 : 21

"சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்."

சுபைக்குக் கொடுக்கப்பட்ட சிலாக்கியம், காரணம் அதற்குள் கிறிஸ்து பிதாவுக்கு மகிமையைச் செலுத்தி தமது மகிமையான குணாதிசயத்தையும் வல்லமையையும் வெளிப்படுத்துகிறார்.

3. கிறிஸ்துவின் அன்பின் பொருள் - எபேசியர் 5 : 25

"புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்." அன்பு செயலில் வெளிப்பட வேண்டும், வெறும் வார்த்தைகளில் அல்ல. தந்தருளி அன்பு கூர்ந்தார். யோவான் 3 :16

4. சபை கிறிஸ்துவுக்குச் சொந்தமானது - எபேசியர் 5 : 27

"மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்."

"நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர், உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும் சிருஷ்டிக்கப் பட்டவைகளுமாயிருக்கிறது" வெளிப்படுத்தல் 4 : 11

சபையின் சரித்திரத்தையும் நமது பெலவீனமான முயற்சிகளையும் பார்க்கும் போது, தேவ சித்தம் சபையின் வாயிலாகவே நிறைவேற்றப்படும் என்பதை உணர்வோமாக.

அவர் அதைத் திட்டம்பண்ணினார்.

GCI

அவரே அதற்கு அடித்தளமிட்டார் - இயேசு அதற்கு மூலைக்கல்லாய் இருக்கிறார்.

அவரே அதை நிறுவினார் - பெந்தெகோஸ்தே நாள் மற்றும் அவரது ஊழியங்கள்.

அவரே அதை நிறைவேற்றி முடிப்பார் - தமது பரிசுத்தாவியின் வல்லமையின் வாயிலாக.

## III. சபையின் தலைமைத்துவம் - 1 தீமோத்தேயு 3: 2 – 7

A. தகுதிகள்

1. தேவனால் அழைக்கப்பட்டவர்கள்.

வேதாகமப் பள்ளி நம்மைப் பயிற்றுவிக்கலாம். சபை ஊழியம் செய்ய வாய்ப்பை உமக்குக் கொடுக்கலாம் - ஆனால் தேவன் ஒருவரே அழைக்க முடியும். அழைக்கப்படவில்லையானால், கடினமான சூழ்நிலைகளைக் கடக்க வேண்டிய பெலம் ஒன்றுமிராது. அது ஒரு வேலையாக இருக்கலாம். ஆனால் தலைமைத்துவம் ஒரு அழைப்பாய் இருக்கிறது.

2. குற்றம் சாட்டப்படாமை - கேள்விக்குறிக்குட்படாத குணாதிசயம் 1தீமோத்தேயு 3 : 2

பாவமற்ற பூரணராக அல்ல, ஆனால் சபையார் பின்பற்றக் கூடிய முன்மாதிரியாக இருக்கும் படியாக.

தானியேல் 6 : 4 - ஒரு குற்ற முகாந்தரத்தையும் கண்டுபிடிக்க முடியவில்லை.

3. ஒரே மனைவி உடையவர் - பாலுறவு ரீதியான பரிசுத்தம். 3 : 2

முழுமையாகத் தன் மனைவிக்காக அர்ப்பணித்தவர். திருமணமாகதவரானால் எந்த ஒரு பெண்ணின் மனிதனாக இருப்பவராய் அல்ல.

4. ஜாக்கிரதையுள்ளவன் - தேவையற்ற உச்சத்திற்கு அடிமைப்படாதவன். 3 : 2

சீரிய சிந்தனை, நல்ல நிதானிப்பு. அதிக பட்ச உணவு உண்பது, அதிகமான சிற்றின்பத்தில் திழைப்பது போன்றவையும் குறிக்கும்.

GCI

5. தெளிந்த புத்தியுள்ளவன், சுயக் கட்டுப்பாடு. வ.3 : 2

ஆண்டவருடைய சமுகத்தில் இருப்பதிலும் வேதம் வாசிப்பதிலும் நேரம் செலவழிப்பவர்.

6. யோக்கியதை உள்ளவர், நல்ல சுபாவம் உடையவர் 3 : 2

குழப்பமுண்டாக்குபவராகவும் குழம்புகிறவராகவும் இருப்பதில்லை.

7. அந்நியரை உபசரிப்பவர் - மக்கள் உடன் இருப்பதை விரும்புகிறவர்; அந்நியருக்கு இரக்கம் காட்டுபவர். 3 : 2

8. போதகசமர்த்தன் - இந்தக் குணாலட்சனம் கண்காணிப்பின ஊழியம் செய்பவருக்கு அவசியம்.

உதவி செய்யும் ஊழியருக்கு இது அவசியத் தேவை இல்லை. போதிக்கிறவர் தான் போதிப்பதைச் செயலில் காண்பிக்க வேண்டும்.

1 கொரிந்தியர் 11 : 1 நான் கிறிஸ்துவைப் பின்பற்றுவது போல, நீங்களும் என்னைப் பின்பற்றுங்கள் என்று பவுல் கூறுகிறார். தேவனிடமிருந்து புதிய வெளிப்பாடுகளைப் பெற்று சபைக்குப் போதிக்கும்படியாக அதிக நேரம் ஜெபத்திலும் வேத வாசிப்பிலும் செலவிடப்பட வேண்டும். நல்ல போதகர் எப்போதும் கற்றுக் கொள்பவர்.

9. மதுபானத்திற்கு அடிமைப்படாதவா - குடிகாரனென்று அறியப்படாதவர். 3 : 3 மதுபான பார்களுக்கும் அவை சார்ந்த பகுதிகளுக்கும் செல்லாதவர்.

10. அடிக்கிறவரல்ல - சண்டை வீரர் அல்ல. அதி வேக கோபக்காரரல்ல. 3 : 3

11. சாந்தமுள்ளவர் - பொறுமை உள்ளவர். 3 : 3

மற்றவர்களைப் புரிந்து கொள்பவர். மனித தோல்விகளை மன்னிக்கிறவர். தனக்கு விரோதமாகத் தவறிழைத்தவர்களின் தவறுப் பட்டியலை மனதில் வைத்துக் கொண்டு அலைபவரல்ல. தனக்கு விரோதமாகச் செய்யப்பட்ட தவறுகளைப் பற்றிப் பேசுவதோ, சிந்திப்பதோ கிடையாது.

12. சண்டை பண்ணாதவர் - வாக்குவாதம் செய்யாமல், சமாதானம் பண்ணுகிறவராகத் திகழ்கிறார். 3 : 3

13. பண ஆசை இல்லாதவர் - ஒரு சபை நல்ல பணம் கொடுக்கிறது என்னும் காரணத்தால் அச்சபையினுடைய பொறுப்பினை ஏற்றுக்கொள்பவரல்ல. 3 : 3

பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது.

14. தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துபவர், தன் பிள்ளைகளைக் கீழ்ப்படியப் பண்ணுகிறவர் - அவருடைய சொந்தக் குடும்பம் முதலாவது நல்ல நிலையில் இருக்க வேண்டும். 3 : 4-5

அவருடைய சொந்தக் குடும்பம் நல்ல நிலையில் இல்லாவிடில், அவரால் எப்படி தேவ வீட்டை நிர்வகிக்க முடியும்? அவருடைய குடும்பம் விசுவாசிகளுக்கு மாதிரியாக இருக்க வேண்டும். குடும்பப் பொருளாதார மேலாண்மை, குடும்பத்தின் அனுதினத் தேவையைச் சந்திப்பது போன்றவையும் இவற்றில் அடக்கம். அவருக்குப் பிள்ளைகள் இருந்தால் அவர்கள் தகப்பனை மதித்துக் கீழ்ப்படியவும், அவர் உபதேசிப்பதை விசுவாசிக்கவும் வேண்டும்.

15. புதிய விசுவாசி அல்ல - தன்னால் நடத்தப்படும் மக்களைவிட ஆவிக்குரிய நிலையில் தேறினவராக இருக்க வேண்டும். 3 : 6

தலைவன் இருக்கும் நிலையின் அளவுக்கே சபை வளர முடியும். காரணம் : பெருமை அவரை ஆளுகை செய்து விடும்.

சாத்தான் பெருமையினாலே விழுந்து போனான். ஒரு வேளை புதிய சபையை நடத்துபவர் புதிய கிறிஸ்தவராயிருந்தால் கூட அந்த சபையிலிருக்கும் மற்ற விசுவாசிகளைவிடத் தேறியவராக இருக்க வேண்டும்.

16. சபைக்குப் புறம்பே இருக்கிறவர்கள் மத்தியில் நன்மதிபபு பெற்றவர் - கிறிஸ்தவரல்லாதவர்கள் அவரை ஒரு உத்தமனாக, அன்புள்ளவராக, சமாதானம் செய்பவராகக் காண வேண்டும். 3 : 7

அவருடைய போதனையை அவர்கள் ஏற்றுக் கொள்ளாமலிருக்கலாம், ஆனால் அவருடைய வாழ்க்கைமுறையில் குற்றம் கண்டுபிடிக்கலாகாது.

அவரது வாழ்வில் எல்லா நிலைகளிலும் தகுதி உடையவராய் இருத்தல் அவசியம் :
ஆவிக்குரிய வாழ்வு
தனிப்பட்ட வாழ்வு
குடும்ப வாழ்வு
ஊழிய வாழ்வு



GCI

GCI

17. புதிய ஏற்பாட்டில் தேவன் இருவித அலுவல்களை சபையில் வைத்துள்ளார் : கண்காணி **(மூப்பன் )**, உதவி செய்கிறவர்கள் (டீக்கன்). கண்காணி என்பவர் ஆளுகை செய்பவர். உதவி செய்பவர் சேவை செய்பவர்.

1) **மூப்பர்கள**

புதிய ஏற்பாட்டில் மூப்பரென்பவர் வயதில் மூத்திருப்பவர். புதிய ஏற்பாட்டில் இரண்டு வார்த்தைகள் உபயோகிக்கப்பட்டுள்ளன. அவை மூப்பர்கள் மற்றும் கண்காணிகள். மூப்பர்கள் வயதில் முதிர்ந்த நபர்கள். கண்காணிகள் மேற்பார்வை செய்பவர்கள். சபையின் ஆவிக்குரிய தன்மையைக் கவனித்து அதன் வளர்ச்சியை மேற்பார்வை செய்பவர்கள்.

இதை இவ்வாறு சொல்லலாம். மூப்பரென்பவர் ஒரு மனிதன். கண்காணி என்பது அவர் வகிக்கும் ஸ்தானம்.

அவருடைய பொறுப்புகள் :

(i) சபையில் தலைமைப் பொறுப்பைக் கவனிக்கிறார்.
(ii) வழி நடத்துகிறார்.
(iii) மக்களுக்கான கரிசனை
(iv) மக்களுக்குப் போதிககிறார்.
(v) தவறான போதனைகளிலிருந்து தன் மக்களைப் பாதுகாக்கிறார்.

2. உதவி செய்கிறவரென்பதின் அர்த்தம் மக்களின் ஊழியர்கள்.

குறிப்பிட்ட ஊழியத்தில் உதவி செய்கிறார். உதாரணமாக வீடு சந்திப்பு, சிறுவர் ஊழியம், வாலிபர் ஊழியம் மற்றும் நிர்வாகம். அவர் கண்காணியின் அதிகாரத்தின் கீழிருந்து செயல்படுகிறார். மேய்ப்பனை ஏற்படுத்துவதும் மாற்றுவதும் அவரது பணியல்ல. சபையில் ஆளுகை செய்ய அழைக்கப்படவில்லை. போதிக்க அழைக்கப்படவில்லை, ஆனாலும் அதைச் செய்வது சாத்தியமானது தான்.

B. அடிப்படை ஊழியங்கள்

1. அப்போஸ்தலர்கள் - அனுப்பப்பட்டவர் எபேசியர் 4 : 11

a) பணிவிடைக்காரனின் இருதயம்.

GCI

b) மக்களால் அறியப்பட்ட ஆவிக்குரிய அதிகாரம்.

c) ஆவிக்குரிய தகப்பன்.

d) வேத வசனத்தில் தேர்ந்த அறிவும், புரிந்து கொள்ளுதலும் ஞானமும் உடையவர்.

e) தாழ்மை - கவனிக்க. பவுலின் மாம்சத்தில் இருந்த முள்.

f) பொறுமை - 2 கொரிந்தியர் 12 : 12

g) மற்றவர்கள் பின்பற்ற விரும்பும் தலைவன்.

h) அன்பைக் காண்பிக்கிறார்.

ஊழியம் :

(i) சபைகளை நிறுவுகிறார் - புது இடத்தில் நிறுவ முயற்சி
(ii) தேவனுடைய வசனத்தைப் போதித்துப் பிரசங்கிக்கிறார்.
(iii) அவரில் ஆவிக்குரிய வரங்கள் கிரியை செய்கின்றன.
(iv) ஊழியர்களை அதிகாரப்படுத்தி பணி அமர்த்துகிறார்.
(v) தகுதியுள்ள தலைவர்களைப் பயிற்றுவிக்கிறார்.
(vi) ஒரு தனி சபையின் மீது மட்டும் நோக்கமாய் இராமல் உலகலாவிய சபையின் தரிசனம் உடையவராய் இருக்கிறார்.
(vii) அவர் நிறுவும் சபைகள் மேல் கரிசனை உடையவராய் இருக்கிறார்.
(viii) ஸ்தல சபையுடன் இணைத்துப் பார்க்கப்பட வேண்டியவர்.

பவுல், இதற்குச் சிறந்த உதாரணம்.

2. தீர்க்கதரிசிகள் - தேவனின் சார்பாகப் பேசுகிறவர் எபேசியர் 4 : 11

உதாரணம் . எரேமியா … 1 கொரிந்தியர் 12 : 28

(a) நடக்கப்போகிறவைகளை முன்கூட்டியே அறிவிக்கிறவர்.
(b) போதனையிலும், ஆறுதல் கூறும் போதும் அவர்களைக் கட்டியெழுப்ப தேவனுடைய மனதைப் பேசுகிறார். தீர்க்கதரிசனம் சொல்லுகிற அனைவரும் தீர்க்கதரிசியாய் இருக்க வேண்டிய அவசியமில்லை. ஆனாலும் இது தேவனால் கொடுக்கப்பட்ட ஊழியம்.

3. சுவிசேஷகர்கள் - 'நற்செய்தியைச் சுமந்து செல்பவர்'. எபேசியர் 4: 11

பொது சுவிசேஷ ஊழியம் : பிலிப்பு

இயேசுவைப் பிரசங்கித்தான், திரள் கூட்டம் கேட்டது. அற்புத அடையாளங்கள் பிரசங்கத்தைப் பின் தொடர்ந்தது. அப் . 8 : 5 -7

GCI

தனிநபர் சுவிசேஷ ஊழியம்: பிலிப்பு அப்போஸ்தலர் 8 : 35 -38
தேவ சத்தத்தை அறிந்து கீழ்ப்படிந்தான்.
அதிகாரத்திலிருக்கும் ஒருவருக்கு ஊழியம் செய்யப் பயப்படவில்லை.
தனியொரு மனிதனுக்கு ஊழியம் செய்ய விருப்பமாய் இருந்தான்.
வேத வாக்கியங்களை அறிந்து அவைகளைப் பிரசங்கிக்கும் திறன் உடையவனாய் இருந்தான்.
கிறிஸ்துவைப் பிரச்கித்தான், உபதேசத்தை அல்ல.
புதிய விசுவாசிக்கு ஞானஸ்நானம் கொடுத்தான்.

சுவிசேஷ ஊழியம் செய்ய அனைவரும் அழைக்கபட்டிருக்கிறார்கள், ஆனாலும் எல்லோரும் சுவிசேஷ ஊழிய வரம் பெற்றவர்கள் அல்ல.

4. மேய்ப்பர்கள் - எபேசியர் 4: 11

ஆடுகளைப் பராமரிக்கும் கரிசனை உடைய மேய்ப்பனின் இருதயம் உடையவராய் இருக்க வேண்டும் - யோவான் 10

a) ஆடுகள் மேய்ப்பனின் சத்தத்தை அறிந்து கொள்ளும் - ஆவியானவரின் சத்தம்.

b) ஆடுகளை அறிந்து அவைகளுடன் தன்னை அடையாளப்படுத்திக் கொள்கிறார்.

c) ஆடுகளைப் பெயர் சொல்லி அழைக்கிறார் - தனிப்பட்ட தொடர்பு

d) தன் ஆடுகளுக்குத் தேவையான புல்லுள்ள இடமென்னும் வார்த்தைக்கு நேராக நடத்துகிறார்.

e) ஆடுகளை நடத்துபவர். மேலும் அவர் தமது வாழ்வின் உதாரணத்தின் வாயிலாக வழி நடத்துவதால் ஆடுகள் அவரைப் பின்பற்ற ஆவலாயிருக்கும்.

f) ஆடுகளின் மீது மனதுருக்கமும் அனபும் உடையவராய் இருப்பார்.

g) ஆடுகளுக்காகத் தன் ஜீவனையும் கொடுக்க ஆயத்தமாய் இருக்கிறார்.

h) ஆடுகளைப் பராமரிப்பார்.

GCI

i) ஆடுகளுக்கு சுகத்தை நாடுவதுடன், காணாமற் போனவைகளைத் தேடுவார்.

j) அவைகளின் மேல் அதிகாரத்துடன் ஆளுகை செய்யாமல் அன்புடன் ஆளுகை செய்வார்.

k) எதிரிகளிடமிருந்து ஆடுகளைப் பாதுகாப்பார்.
l) அவைகளைச் சிதறடிக்கும் எந்தக் காரியத்தையும் சொல்ல மாட்டார்.

5. போதகர்கள் - 'புத்தி சொல்ல, தகவல் அறிவிக்க' எபேசியர் 4: 11

a) வசனத்தின் நல்ல மாணவராய் இருக்க வேண்டும்.

b) நல் வெளிச்சம் தரும் சத்திய வசனத்தை தியானிக்க வேண்டும்.

c) போதனைக்குச் செவிகொடுப்பவராய இருக்க வேண்டும் - எப்போதும் கற்றுக்கொள்ளும் ஆவல்.

d) வேதத்தைக் கற்றுக்கொள்வது எப்படி என்பதை அறிந்திருக்க வேண்டும்.

e) தன் போதனைகளில் புதுமையைக் கடைபிடிக்க வேண்டும் - இயேசு பல உவமைகளை உபயோகித்து, திறந்த வெளிகளிலும் பாதைகளில் நடந்து கொண்டும் வசனத்தைப் போதித்தார்.

f) தாம் போதிப்பதை வாழ்க்கையில் வாழ்ந்து காட்டுபவராய் இருக்க வேண்டும்.

## IV சபை மற்றும் உறுப்பினர்களின் பங்கு

### A. சபையின் பங்கு

1. துதி ஆராதனை = 1-2 :தேவனுக்கு ஊழியம்

2. ஜெபம் மற்றும் உபவாசம்

3. வசனத்தைப் பிரசங்கித்தல் = 3-5 : விசுவாசிகளுக்கு ஊழியம்

GCI

4. விசுவாசிகளைச் சீஷராக்குதல்

5. வசனத்தைப் போதித்தல்

6. சுவிசேஷம் சொல்லுதல் = 6 - 7 : விசுவாசிகள் அல்லாதவர்களுக்கு ஊழியம்

7. ஊழியம் (மததேயு 28:18 – 20)

8. சந்திப்பு - வியாதியஸ்தரை மருத்துவ மனைகளில் சந்திப்பது போன்றவை.

9. நியமஙகள் : கட்டளைகள்

a) ஞானஸ்நானம் - முழுக்கு ஸ்நானம்

(i) கிறிஸ்துவின் கட்டளைக்குக் கீழ்ப்படிதல்
மாற்கு16:16, மத்தேயு 28:18 – 20

(ii) இயேசு அதற்கு மாதிரியாய் இருந்தார்.

(iii) விசுவாசிகளுக்கு - இதைச் செய்வதால் கிறிஸ்தவர் என்று சொல்லமுடியாது.

(iv) இதன் வாயிலாகக் கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலில் அவரோடு ஐக்கியப்படுகிறோம்.

(v) பிதா, குமாரன் பரிசுத்த ஆவியானவருடைய நாமத்தில் ஞானஸ்நானம் பெற வேண்டும். கிறிஸ்து ஞானஸ்நானம் பெறும் போது திரித்துவம் பிரசன்னமாயிருந்தது - பிதா பேசினார், ஆவியானவர் புறாவைப் போல் வந்தார்.

(vi) விசுவாசித்த போது ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டனர். எத்தியோப்பிய மந்திரி விசுவாசித்த உடனே ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார். அப். 8:12

b) திருவிருந்து - கர்த்தருடைய பந்தி

(i) இயேசு தம்மை நினைவு கூறும்படியாக இதைச் செய்யக கட்டளையிட்டார். மத்தேயு 26:26-27; 1 கொரிந்தியர் 11:23..

(ii) அப்பம் சரிரத்தையும் ரசம் இரத்தத்தையும் குறிக்கிறது. அவரது ஜீவனைப் பெறுகிறோம்.

(iii) கிறிஸ்துவின் முழு சரீரமும் ஐக்கியத்தில் பங்கு பெறுவதைக் குறிக்கிறது.

(iv) ஆராதனை ஸ்தலத்திலும், வீட்டு ஜெபக்குழுக்களிலும், குடும்பத்திலும் மற்றும் நண்பர்களுக்கிடையேயும் திருவிருந்து எடுத்துக் கொள்ளலாம்.

GCI

(v) இதை உண்ணும் போதெல்லாம் ''என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்''. எப்போதேல்லாம் என்னும் போது குறிப்பிட்ட கால வரையறையோ எத்தனை முறை என்னும் கணக்கீடோ கொடுக்கப்படவில்லை. அது சபையைப் பொருத்தது.

c) விவாக ஆராதனைகள் மற்றும் மரண ஆராதனைகள்.

## B. உறுப்பினர்களின் பங்கு

1. மற்ற உறுப்பினர்களோடு சரியான உறவை வளர்த்தல்

a) கிறிஸ்துவைப் போலவே ஒருவரையொருவர் ஏற்றுக் கொள்ள வேண்டும். ரோமர் 15: 7

b) ஒருவரையொருவர் பொறுத்துக் கொண்டு மன்னிக்க வேண்டும். மற்ற சிலரைக் காட்டிலும் ஒருசிலரைப் பொறுத்துக் கொள்வது எளிது. கொலோசெயர் 3:12-14

c) தேவன் 'மணல்தாள்' ஊழியம் தந்தருளுவார்.

d) நமக்கு மற்றவர்களும் வேண்டும். சரீரத்தின் அங்கத்தினர் இணைந்து செயல்பட வேண்டும்.

e) கிறிஸ்தவர்களாக நமது முன்னேற்றமும் வளர்ச்சியும் மற்ற விசுவாசிகளுடனான உறவுகளைப் பொறுத்தே அமைகிறது.

f) ஒருவரையொருவர் ஊக்கப்படுத்தி, கட்டியெழுப்ப வேண்டிது - விழத்தள்ள அல்ல. 1 தெசலோனிக்கேயர் 5:11

g) ஒருவரையொருவர் நேசிக்கவும் நன்மை செய்யவும் ஏதுவாக ஊக்கம் கொடுக்க வேண்டும் - கோபத்தைத் தூண்ட அல்ல. எபிரெயர் 10:24

h) ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள். அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக. பிலிப்பியர் 2: 3-4

2. தலைமைத்துவத்திற்குக் கீழ்ப்படிந்திருங்கள் - எபிரெயர் 13:17

a) தாழ்மையாய் அவர்களுடைய தலைமைத்துவம் மற்றும் அறிவுறைக்குக் கீழ்ப்படிந்திருங்கள்.

b) அவர்களைக் கனம்பண்ணுங்கள்.

GCI

c) அவர்களுக்குக் கீழ்ப்படியும்போது நாம் தேவனுக்குக் கீழ்ப்படிகிறோம், ஏனெனில் அவரே அவர்களை ஏற்படுத்தினார்.

d) கீழ்ப்படிதல் என்பது இருதயத்தின் மனப்பான்மை, அடிமைத்தனமல்ல.

e) நமது ஆவிக்குரிய நன்மையைக் குறித்த பொறுப்பு அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆகவே அவர்கள் நம்மில் மகிழ்ச்சியைக் காண வேண்டும், பாரமாக அல்ல.

3. உங்கள் பிரத்யேகப் பங்களிப்பை நிறைவேற்றுங்கள்.

a) சரீரத்தின் அவயவங்களை தேவனே ஏற்படுத்தி இருக்கிறார். 1 கொரிந்தியர் 12:18

b) சரீரத்தில் உள்ள ஒவ்வொரு பகுதிக்கும் முக்கிய செயல்பாடு உண்டு. இருதயம இரத்தத்தை அழுத்துகிறது. நுரையீரல் சுவாசிக்கவும், சிறுநீரகம் அசுத்தத்தை வெளியேற்றுகிறது, காதுகள் கேட்கவும், காணக் கண்களும் பேச நாவும் போன்ற ஒவ்வொரு பகுதிகளுக்கும் சிறப்பான வேலைகள் உள்ளன. ஒவ்வொரு உறுப்பும் தத்தம் கடமைகளை நிறைவேற்றுவது போல, சபையின் ஒவ்வொரு உறுப்பினரும் தமது பொறுப்பைக் கண்டறிந்து நிறைவேற்ற வேண்டும்.

c) உங்கள் தாலந்துகளைக் கண்டறியுங்கள். இசை, வாலிபர், சிறுவர், சந்திப்பு, சுவிசேஷம், வியாதியஸ்தர்களுக்காக ஜெபித்தல் போன்றவை. நீங்கள் எதைச் செய்ய விரும்புகிறீர்களோ அதே உங்கள் தாலந்தாகும்.

d) செயல் படுங்கள், அதைப் பற்றிக் கொள்ளுங்கள், உங்கள் தாலந்துகளை வளருங்கள்.

e) வெறுமனே சபையில் அமர்ந்து ஒன்றும் செய்யாதவர்களாக இருக்கலாகாது.

4. அர்ப்பணிப்பு

a) விசுவாசிகளின் கூடி வருதல் நேரத்திற்கு அர்ப்பணித்தல். எபிரெயர் 10:25

b) என்னால் எதைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதை விட நான் எதைக் கொடுக்க முடியும் என்னும் எண்ணம்.

GCI

c) கணவன் மனைவி மற்றும் முதலாளி தொழிலாளி இடையேயான அர்ப்பணிப்பு

d) நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம். யோசுவா 24: 15

e) அதற்கு ரூத்: "நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன் நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன். உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம் உம்முடைய தேவன் என்னுடைய தேவன்." ரூத் 1: 16

f) சபையின் தலைமைத்துவம், உறுப்பினர்கள் மற்றும் தரிசனத்துக்கு அர்ப்பணியுங்கள்.

g) நான் உலகலாவிய சபைக்குக் கட்டுப்பட்டிருக்கிறேன் என்று சொல்லிக்கொண்டு ஸ்தல சபையில் தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்ளாதவர் கவனமற்றவராகவும் ஏமாற்றத்திற்கு உரியவராகவும் காணப்படுகிறார்.

5. சேவை

a) "உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாய் இருக்கக்கடவன். மனுஷகுமாரனும் ஊழியங் கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்" மத்தேயு 20:26-28

b) அன்பினால் ஒருவரையொருவர் சேவியுங்கள். சில காரியங்களைச் செய்து முடிக்கும் நோக்கில் சேவை செய்யாமல், அன்பே - தேவன் மீதான அன்பு மற்றும் அவரது மக்கள் மீதான அன்பு - இதற்கு உந்து சக்தியாய் இருக்க வேண்டும். கலாத்தியர் 5:13

c) மகிழ்ச்சியோடு கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள். சங்கீதம் 100:2

d) அரை மனதோடு செய்யாமல் முழு பெலத்தோடு சகல காரியத்தையும் செய்யுங்கள். பிரசங்கி 9 : 10

e) சபையில் உங்களுடைய பங்கு சிறியதாயிருப்பினும், முழுமையான சபையின் செயல்பாட்டிற்கு உங்களுடைய பங்கு இன்றியமையாதது.

GCI

f) வேற்றுமை, பிரிவினை இல்லை - எல்லாருக்கும் ஒரே மாதிரியான கவனம் செலுத்தப்பட வேண்டும். 1 கொரிந்தியர் 12:25

g) உக்கிராணக்காரன் உண்மையுள்ளவனென்று காணப்படுவது அவசியமாம். 1 கொரிந்தியர் 4:2

## V பயனுள்ள சபையின் அடையளங்கள்

A. தேவ பக்தியுள்ள தலைவர்கள்

1. அவர் தெரிந்து கொள்ளப்பட்டதன் காரணம் அவரது தொழிலில் வெற்றியைப் பார்த்தோ அல்லது அவரது பேச்சுத்திறனைப் பார்த்தோ அல்ல. மாறாக அவருடைய உண்மையைப் பார்த்தே தெரிந்து கொள்ளப்பட்டார்.

தலைமைத்துவத்தில் கிறிஸ்தவரல்லாதவரையோ அல்லது அனலற்ற விசுவாசியையோ வைத்து சபையை வழிநடத்த இயலாது.

2. ஊழிய இலக்குகளை நிர்ணயிக்கிறார்கள்

a) ஊழியத்தின் பாதையை நிர்ணயித்தல் - இல்லாவிடில் குறி வைக்காமல் அம்பு எய்வது போல் இருக்கும்.

b) பொதுவான நோக்கங்களை மக்கள் ஏற்று செயல்பட வாய்ப்பு

c) அடிப்படை இலக்கு மக்களைக் கிறிஸ்துவிடம் ஆதாயப்படுத்துவது மற்றும் சீஷராக்குவது என்பவை, ஆனால் எத்தனை நபர், எப்பொழுது, எப்படி என்பது போன்ற இலக்குகளை நிர்ணயிப்பது.

d) ஊழியத் திட்டம்.

3. சீஷத்துவத்திலும் பங்கு வகிக்கிறது.

a. சபை பூரண வளர்ச்சி அடைய வேண்டும் - குழந்தைகளாகவே இருக்கக் கூடாது.

b. வேத வார்த்தைகளிலிருந்து சத்தியங்களைக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

c. வேத சத்தியங்களைத் தினசரி வாழ்க்கைகளில் நடைமுறைப் படுத்த சீஷர்களுக்கு உதவி செய்ய வேண்டும்.

GCI

d. தேவனுடைய வார்த்தைகளின் வாயிலாகத் தம் பிரச்னைகளைத் தீர்க்க உதவி செய்ய வேண்டும். குறிப்பிட்ட சூழ்நிலையினைச் சந்திக்கும் போது வேதத்தின் அடிப்படையில் எதிர்கொள்வதைக் கற்றுக் கொள்வது அவசியம்.

4. சமுதாயத்தில் தாக்கம் ஏற்படுத்த வேண்டும் என வலியுறுத்துபவர்.

a. நீங்கள் சமுதாயத்திற்குக் கடந்து போக வேண்டும். சமுதாயம் உங்களிடம் வராது.
b. சிறந்த ஊழியம் நீங்கள் வசிக்கும் உங்கள் பகுதியில் உள்ள ஒவ்வொரு நபராகச் சந்திப்பது ஆகும்.

c. உங்கள் குடும்பம் உங்களின் முதல் இலக்காக இருக்க வேண்டும். சில குழுக்களில், குடும்பத் தலைவர் இரட்சிக்கப்பட்டால் முழுக் குடும்பமும் இரட்சிக்கப்படுவதைக் காணலாம். கிராமத் தலைவர் இரட்சிக்கப்பட்டால் அந்தக் கிராமமே இரட்சிக்கப்படலாம். உங்கள் சுவிசேஷ ஊழியத்தில் இப்படிக் குறிவைத்து செயல்படுங்கள்.

d. நீங்கள் எப்படிப்பட்ட சுவிசேஷ ஊழியத்தை எதிர்பார்க்கிறீர்கள்? வருடத்தில் ஒருமுறை வெளி நாட்டு ஊழியரை வைத்து நடத்தும் ஒரு வாரக் கூட்டமா, அல்லது வருடத்தில் 365 நாட்களும் ஊழியம் செய்கிற சபையா?

e. பெருக்கத்தை ஏற்படுத்துவது அவசியம். மற்ற சபையிலிருந்து வெளியே வந்தவர்களால் அல்ல - புதிய வளர்ச்சி.

அ) அப். 16:5 - சபைகள் எண்ணிக்கையில் பெருகின.
ஆ) அப். 13:44 - ஏறத்தாழ முழு நகரமும் இணைந்து வந்து வேத வசனத்தைக் கேட்டனர் - அல்லேலுயா.

5. ஒவ்வொருவர் மீதும் கரிசனை உடையவர்

a. சபை உறுப்பினர்களின் வாழ்க்கையில் ஈடுபாடு கொண்டிருக்க வேண்டும். சாதாரணமாக சபைக்குள் வந்து உட்கார்ந்து கடந்து போவதால் சபையில் ஈடுபாடு காண்பிப்பவர் என்று சொல்ல முடியாது.

b. ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக்கடவோம். மின்கலம் (பேட்டரி) தன்னில் தானே உயிர் உள்ளதல்ல. அது தன் முடிவுப்பகுதியில் மற்றொரு மின்கலத்தில் இணைக்கும் போது சக்தி ஏற்படுகிறது. எபிரெயர் 10:24-25

c. “ஒருவருடைய பாரத்தை ஒருவர் சுமந்து…” கலாத்தியர் 6:2

GCI

d. "ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள். யாக்கோபு 5:16

e. ஒருவருக்கொருவர் கவனித்து, ஒருவருக்கொருவர் கரிசனையாய் இருக்கும்படியாக நேரம் செலவழியுங்கள்.

f. பரஸ்பரம் பகிர்ந்து கொள்ளும் அன்பின் சமுதாயமாக சபை இருக்க வேண்டும். உதாரணம் - ஆதித்திருச்சபை - எல்லாவற்றையும் பொதுவாக வைத்து அனுபவித்தார்கள்.

6. சொந்தக் குடும்பத்தின் மீது அக்கறை உடையவர்.

- உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக. யாத்திராகமம் 20:12
- பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம். எபேசியர் 6:1
- புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்ளூ அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து... எபேசியர் 5:25
- மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல, உங்கள் சொந்தப் புருஷருக்குங் கீழ்ப்படியுங்கள். எபேசியர் 5:22
- பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக. எபேசியர் 6:4
- இந்த சத்தியங்கள் கற்றுக்கொடுக்கப்பட வேண்டும்.
- உங்கள் மக்கள் அறிய வேண்டிய காரியம் என்னவெனில் தேவனுக்கு அடுத்ததாக அவர்களுடைய குடும்பத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதே.
- பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசியாகிய ஏலி மற்ற அனைவருடைய ஆவிக்குரிய தேவைகளைச் சந்தித்த வேளையிலும் அவருடைய குமாரர்கள் துன்மார்க்கராய்ப் போனார்கள். தேவன் அவரை நியாயந்தீர்த்தார்.

7. வேதாகமப் போதனை மற்றும் பிரசங்கம்

- மக்கள் கேட்க விரும்புவதாக நினைப்பவைகளையோ அல்லது தற்போதைய நாட்டுநடப்புக்களையோ பிரசங்கம் செய்யாமல் தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கம் செய்ய வேண்டும்.
- தேவனுடைய வார்த்தையால் மட்டுமே மககளை மாற்ற இயலும்.

GCI

8. மாற்றிக்கொள்ள விரும்புபவர்.

a) தேவன் புதுமைகளின் ஆண்டவர். நம் மத்தியில் புதியவைகளைச் செய்ய விரும்புகிறார்.

b) பாரம்பரியம் நமது பாதுகாப்பாக முடியும் - ஏசாயாவின் இரட்சிப்பின் மதில்கள் மற்றும் துதிகளின் நுழைவாயில்கள்.

c) ஏற்கனவே இருந்து வரும் அமைப்பை உடைக்க ஆயத்தமாய் இருங்கள். ஆராதனை முறையில் சில மாற்றம் செய்யுங்கள்.

d) அமைப்பு என்னும் வேலியில் சிக்கிக் கொள்ளாதீர்கள். அமைப்பு நல்லது தான், ஆனால் அது வாழ்வை நெறித்துப் போட அனுமதிக்காதீர்கள்.

e) பரிசுத்த ஆவியானவருக்கு செவிகொடுக்கிறவர்களாய் இருங்கள்.

f) மக்களின் தேவையைச் சந்திக்கும் விதத்தில் சூழலைத் தத்தெடுத்துக் கொள்ளுஙகள்.

B. சபையின் ஒழுக்கம் / சிட்சை

பொருள் வரையறை: போதனை மற்றும் திருத்துதலின் வழியிலான ஒழுக்கம
சிட்சையையும் உள்ளடக்கியது.
நடத்தையை ஆளுகை செய்ய ஏற்படுத்தப்படும் சட்டதிட்ட கட்டுப்பாடு.

1. ஒழுக்கத்தின் அவசியம்

i. கிரமம் மற்றும மகிழ்ச்சியை அடைய.

ii. கீழ்ப்படிதலின் தத்துவத்தை அறிமுகப்படுத்துகிறது. நமது விருப்பத்தை தேவனுக்கும் அவருடைய வார்த்தைக்கும் அர்ப்பணம் செய்வது.

iii. அன்புடன் செய்யப்படும் போது பாதுகாப்பான உணர்வை ஏற்படுத்து கிறது. தனது எல்லையை அறிந்து கொண்ட நபர் பின்வாங்கிப்போகாத படி காத்துக்கொள்ள இயலும்.

2. ஒழுக்கத்தின் நோக்கம்

a. பாவத்தைக் குறித்த உணர்வைக் கொண்டு வந்து மனந்திரும்புதலுக்கு வழிநடத்துகிறது -

ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கவோ, வேதனைப்படுத்தவோ அல்லது சிறுமைப்படுத்தவோ அல்ல.

b. தவறைத் திருத்தும் செயல், குறிப்பிட்ட நபரை வெறுக்கும் செயல் அல்ல.

c. தேவனுடானன உறவில மீண்டும் சரிப்படவும், மற்ற நபர்களுடன் சரியான ஐக்கியத்தைக் காத்துக்கொள்ளவும் உதவுகிறது.

d. ஒரு நபரை மீட்டுக்கொள்ள உதவுகிறது - கலாத்தியர் 6:1 - சரி செய்தல் அல்லது இடம் மாறிப் போன எலும்புகளைச் சரியாகப் பொருத்துதல் என்று அர்த்தம் கொள்கிறது.

e. குணமாக்கப்பட வேண்டிய காயம ஒன்று இருக்கிறது.

3. ஒழுக்கத்தின் உதாரணங்கள்

- ❖ ஆதாம் ஏவாள் - தோட்டத்திலிருந்து தள்ளப்பட்டனர்.
- ❖ காயீன் - தேவனுடைய பிரசன்னத்திலிருந்து விலகிப் போனவன். ஆதியாகமம் 4:16
- ❖ தலைமைத்துவத்தை எதிர்த்ததால் மிரியாம் குஷ்டரோகியானாள்.
- ❖ தேவனுக்குக் கீழ்ப்படியாததால் ஆகான் மரண தண்டனை அடைந்தான். யோசுவா 7
- ❖ நோவா மற்றும் பேழை
- ❖ சோதோம் கொமாரா நியாயத்தீர்ப்பு
- ❖ பாபேல் கோபுரம் - பெருமையின் விளைவு
- ❖ அனனியா சப்பீராள் - பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமான பொய்.

4. ஒழுக்கத்தின் வேத வழிமுறைகள் மத்தேயு 18 : 15 - 20

a) தனிப்பட்ட திருத்த முயற்சி



GCI

உன் சகோதரனிடம் நேரடியாகச் சென்று - வேறு யாரிடமும் அல்ல. வ.15

GCI

b) பொதுவான சீர்திருத்தம்

i. முதல் படி - உன் சகோதரனிடம் தனியாகச் செல்.... உனக்குச் செவிகொடுத்தால் நீ உன் சகோதரனை ஆதாயப்படுத்திக் கொண்டாய். வ.15

முக்கியத் தேவைகள்:

சரியான மனப்பான்மை மற்றும் நடத்தை
சரியான ஆவியில் சொல்லப்பட்ட சரியான வார்த்தைகள்
ஒப்புரவாகும் விருப்பம்
அந்த நபரின் உடன்பாடு

ii. இரண்டாம் படி: "அவன் செவிகொடாமற்போனால், இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே சங்கதிகளெல்லாம் நிலைவரப்படும்படி, இரண்டொருவரை உன்னுடனே கூட்டிக்கொண்டு போ." வ.16

அந்த நபருக்கு மிகவும் நெருக்கமான நண்பர்களாக இருக்கலாம். நம்பிக்கைக்குரியவராகக் கருதப்படும் ஒரு நபர். பகுத்துணரும் திறனுடைய ஆவிக்குரிய முதிர்ச்சி உள்ள நபர்கள். இரு சாட்சிகள் காரியத்தைக் கேட்டு, சூழலை ஆராயலாம்.

இது சம்பந்தப்பட்ட நபரின் தவறின் தன்மையைப் புரிந்து கொள்ளவும், திருத்திக் கொள்ள வேண்டிய அவசியத்தையும் அறிய உதவுகிறது.

முதல் இரு படிகளிலும் செவிகொடாதே போனால் அடுத்த படியை அவருக்குக் காண்பிக்க வேண்டும்.

iii. 3 வது படி: "அவர்களுக்கும் அவன் செவிகொடாமல் போனால், அதைச் சபைக்குத் தெரியப்படுத்து" வ.17

தொடர்ந்து இந்தப்படியின் நோக்கமும் சபையாக இணைந்து அவருக்கு எடுததுச் சொல்லி அவரைப் பாவத்திலிருந்து விலகச் செய்வது தான்.

iv. நான்காவது படி - சபைக்கும் செவிகொடாதிருப்பானானால், அவன் உனக்கு அஞ்ஞானியைப் போலவும் ஆயக்காரனைப் போலவும் இருப்பானாக. இந்தச் செயலில் முழு சபையும் இணைந்து செயல்பட வேண்டியது அவசியம். வ.17

GCI

(இதன் விளைவாக அந்த நபர் கடடப்பட்டவராகிறார்.)

v. ஐந்தாவது படி: கட்டவிழ்த்தல் - அந்த நபர் திருந்தும் போது. வ.18

கருத்து அல்லது தனிநபர் வித்தியாசங்கள், 3 வது அல்லது அதற்கு மேற்பட்ட படிகளுக்கு எடுத்துச் செல்லாது. ஒழுக்கரீதியான பாவங்கள், நேர்மையின்மை போன்றவை மட்டுமே முழு சபைக்கும் எடுத்துச் செல்லப்பட வேண்டும்.

5. பாவம் செய்த சகோதரனை மீட்டுக் கொள்ளுதல் - கலாத்தியர் 6:1

a. பழைய நிலைக்குக் கொண்டு வருதல்.

b. சாந்தமுள்ள ஆவியோடு மீட்டுக் கொள்ளுதல்.

c. நீங்களும் விழுந்து போக வாய்ப்பு உள்ளது என அறிந்து கொள்ள வேண்டும்.

d. **ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்.** கலாத்தியர் 6:2

e. சுமக்க இயலாத பாரத்தால் ஒருவர் விழுந்து போயிருப்பாரானால் நாம் குனிந்து அவர் பாரத்தைச் சுமக்க அவருக்கு உதவ வேண்டும்.

f. அந்த நபர் குறிப்பிட்ட பாவத்திலிருந்து பலமுறை மனந்திரும்பி இருந்திருக்கலாம், குறிப்பிட்ட பாவத்திலிருந்து அவர் விடுதலை பெற அவருக்கு நமது உதவி தேவை.

g. **திருவசனத்தில் உபதேசிக்கப் படுகிறவன் உபதேசிக்கிறவனுக்குச் சகல நன்மைகளிலும் பகிர்ந்துகொடுக்கக்கடவன்.** அவரைக் கட்டியெழுப்புங்கள். விழுந்து போன சகோதரனை ஊக்கப்படுத்துங்கள். கலாத்தியர் 6:6

h. மன்னிப்பு மீட்டுக்கொள்ளுதலுடன் இணைந்து செயல்பட வேண்டும்.

i. ஒரு சகோதரன் மீட்டுக்கொள்ளப்பட்ட பின்பும் அவரது பாவத்தை அவருக்குத் தொடர்ந்து நினைப்பூட்டிக் கொண்டு இருக்கலாகாது.

GCI

Reference:

1. Kevin J. Conner, The Church In The New Testament, (Oregan: Bible Temple Publishing House), 1989